“உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு” (ஆமோஸ் 4 : 12)

நான் என் நேசருடையவன் ; என் நேசர் என்னுடையவர்.



“ஆண்டவருடைய சினத்தின் மிலாற்றினால் உண்டான சிறுமையைக் கண்ட புருஷன் நான்.” (புலம்பல் 3 : 1) நான் சிறுவனாக இருந்த நாட்களில் என் பரிசுத்த தகப்பனார் என்னோடு பகிர்ந்து கொண்ட வேத வசனமே மேற்

குறிப்பிடப் பட்டதொன்றாகும். அவர்கள் பட்ட பாடுகளையும், கண்ணீர்களை யும், பசியையும், பட்டினியையும், நிந்தையையும், அவமானத்தையும், இழப்பையும் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளேயே கலங்குகின்றது. “ஒருவன் என்னைப்பின்பற்றி வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை சுமந்து கொண்டு என்னை பின்பற்றி வரக் கடவன்.” என்ற அருள்நாதரின் அன்பு கட்டளைக்கிணங்க எந்த ஒரு நிலையி லும் முறுமுறுப்பில்லாமல் அமைதியின் அடிச்சுவடாக,அவர்களின் 83 ஆண்டு நீண்டகால பயணம் முழுவதும் கிறிஸ்துவுக்காக மட்டுமே செலவு செய்யப்பட்டது என்று தான் சொல்லவேண்டும்.

பரிசுத்த பாதையில் அவர்களின் போராட்டம் என்பது அத்தனை லேசான காரியமல்ல என்பதை தேவமக்களாகிய நீங்கள் நன்கு உணர்ந் திருப்பீர்கள் என்று, என்மட்டாக நான் நிச்சயம் நம்புகிறேன். காரணம் தன்னை ஆட்கொண்ட அன்பின் தேவனுக்கு முன்பாக இடது புறம், வலது புறம் விலகாமல் தனக்கென்று நியமிக்கப்பட்ட பாதையில் பொறுமையாக ஓடினார்கள். அவர்களைப்பார்த்த பலர் அவர்கள் முகத்திலுள்ள கிறிஸ்துவின் ஒளியைக்கண்டு பரவசம் அடைந்தார்கள். புறமதஸ்தரும் ஐயாவைப் போல் ஓர் அன்பான மனிதரை இனி காண இயலாது என கூறுவதை என் காதாலே பலமுறை கேட்டிருக்கிறேன். எந்த ஒரு மனிதனும் தன் விரலை நீட்டி குற்றப்படுத்தமுடியாத பரிசுத்த வாழ்வை வாழ்ந்து காட்டினார்கள். அவர்கள் தன் வாழ்க்கையில் கிறிஸ்துவைமாத்திரமே இந்த பூமியிலே பிரதிபலித் தார்கள். முடிவிலே ஒருவனும் பறித்துக் கொள்ள முடியாத நிலையில் தன்னுடைய ஜீவக்கீரிடத்துக்கு சொந்தக்காரராகவும் மாறிவிட்டார்கள்.

உலக மாந்தர்கள் குறிப்பாக கிறிஸ்தவ மக்கள் நினைப்பது போல பரலோக ராஜ்யம் கைக்கெட்டிய தூரத்தில் இருப்பது போலவும், எத்தகைய இழப்பும் இல்லாமல் மிக சுலபமாக மோட்ச பட்டணம் சென்று விடலாம் என்று தங்கள் மட்டாக எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அது முற்றும் தவறான எண்ணம் என்பதனை நித்தியம் ஒரு நாள் உணர்த்தும். பரிசுத்த பவுல் இவ்வாறு குறிப்பிடுகிறார் " நான் அவரையும் அவருடைய உயிர்த் தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன், குப்பையுமாக எண்ணுகிறேன். " (பிலிப்பியர் 3 : 10 ,11)

மரணமானது எல்லா மனிதருக்கும் முன் குறிக்கப்பட்டது என்றாலும் என் தகப்பனார் தன்னை சந்திக்கப்போகும் மரணத்துக்காக ஒவ்வொரு நாளும் தன்னை பரிசுத்தத்தோடும், பயத்தோடும் ஆயத்தம் செய்து கொண்டிருந் தார்கள். ஐயா இப்போது நீங்கள் ஊழியத்துக்காக வட இந்தியா பகுதிகளுக்கு செல்வதில்லையா என்று கேட்கும் தேவபிள்ளைகளுக்கு **நான் பரம எருசலேமுக்குச் செல்ல என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறேன்** என்று அன்பாக மறுமொழி சொல்வார்கள். அன்பு பிள்ளைகளாகிய நாங்கள் எல்லோரும் எப்பொழுதும் அவர்களுடனேயே இருக்கவேண்டும் என்று அதிகமாக விரும்புவார்கள், எனினும் தன்னைச் சந்திக்கப்போகும் மரணத்தைக் குறித்தான துளியளவு பயமும் அவர்களிடத்தில் காணப்பட வில்லையென்றபோதும் பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் பண்ணும் பரிசுத்தரை சந்திக்க ஒவ்வொரு நாளும் பல மணிநேரம் முழங்காலில் நின்று தன்னை

கறைதிரையற்ற கற்புள்ள கன்னிகையாக காத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அவர்களுக்கிருந்த வைராக்கிய வாஞ்சையானது கொஞ்சம் நஞ்சம் அல்ல என்பதனை தெளிவு படுத்தவிரும்புகிறேன்.

மரிக்கும் முன்னரே அறிவிக்கப்பட்ட மரணம்

" நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? (ஆதி18:18)

ஒரு ஏழை மோட்ச பிரயாணியின் சுய சரிதை என தனது சரிதையை **அன்பரின் நேசம்** என்ற புத்தகத்தில் எழுதுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் அவர்களுடைய அன்பு தம்பி சென்னையை சேர்ந்த வெல்லிங்ஸ்டன் ஆவார்கள். அவர்கள் சென்னை பட்டணத்திலிருந்து குடும்பமாக வந்து ஜெபித்து முதல் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளும் படத்தை காணலாம்

.

அன்பரின் நேசம் என்ற புத்தகத்தை எழுதிக்கொண்டிருக்கும் நாட்களில் எங்கள் வீட்டுக்கு வந்த அருமையான தேவனுடைய பிள்ளை ஒருவர் ஜெபத்திலேயே ஐயா எழுதும் கடைசி புத்தகம் இதுவாகத்தான் இருக்கும் என்று கூறினார்கள். ஆனால் தேவன்பால் என் தகப்பனார் கொண்ட அளவு கடந்த அன்பினிமித்தமும், அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்கள் மேலிருந்த மனதுருக்கத்தினிமித்தமும் தயவுள்ள பிதாவானவர் இரங்கி மேலும் இரண்டு புத்தகங்களான **பக்த சிரோன்மணிகள்** மற்றும் அரிதிலும் அரிதான வேதாகமத்துக்கடுத்தபடியான ஜான் பன்னியன் எழுதிய **மோட்ச பிரயாணம்** ஆகியவற்றை எழுதி தேவபிள்ளைகளுக்கு முற்றும் இலவசமாக கொடுக்க அவர்களின் ஆயுசு நாட்களை எசேக்கியா ராஜாவுக்கு கூட்டிக்கொடுத்தது போல் சொற்ப ஆண்டுகள் கூட்டிக்கொடுத்தார் அன்பு கண்மணி.

ஆலய குருவானவரைப் பார்த்தபோது தன்னுடைய மரணத்தை உறுதிப்படுத்தினார்கள்

ஜூன் அல்லது ஜுலை மாதம் 2015 ஆண்டடில் ஓய்வுநாள் ஒன்றின் காலை வேளையில் குடும்பமாக கோத்தகிரியில் உள்ள சி.எஸ்.ஐ. வெஸ்லி ஆலயத்துக்கு ஆராதனைக்காக கடந்து சென்றோம். சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்னர் எனது தாயாரின் அடக்க ஆராதனையை நடத்திக்கொடுத்த ஆயர் அவர்கள் (அருள் திரு ஜெகன் மகேந்திரன்) பணி மாறுதலாக அங்கு வந்திருந்தார்கள். அவரை பார்த்த எங்களுக்கு ஓரே மகிழ்ச்சி ஆனால் என் தகப்பனார் அவரைப்பார்த்த மாத்திரத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் **அம்மாவை அடக்கம் செய்தவர் என்னையும் அடக்கம் செய்ய வந்துவிட்டார்** என ஆலயத்திலேயே எங்களிடம் சொன்னவார்த்தை எங்கள்

இருதயத்தை சுக்குநூறாக உடைத்தது. அது ஆவியானவரின் முன்னறிவுப்பு என்பதனை அப்பொழுது அறிந்துகொள்ள முடியவில்லை.சுமார் 4 1/2 ஆண்டுகளுக்கு பின்னர் 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களன்று 30 ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று அதே ஆயர் அவர்களால் அதே ஆலயத்தில் அடக்க ஆராதனையை நடத்தி அதே ஆலயவளாகத்திலுள்ள கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்து விட்டு, அடுத்தநாளான சனிக்கிழமையன்று இலங்கை தேசத்தில் நடைபெற்ற கிறிஸ்தவமாநாட்டிற்கு பலமாதத்திற்கு முன்பே முன்பதிவு செய்தபடியே கடந்துசென்றார்கள். ஓரே ஒரு நாள் மட்டும் பிந்தியிருந்தால் எல்லாமே மாறியிருக்கும். பரிசுத்த ஆவியானவர் சொன்ன வார்த்தை எவ்வளவு உண்மையும் மாறாததுமாக இருக்கிறது என்பதனை கற்பனை செய்தும் பார்க்கமுடியவில்லை. **அவர் சொல்லியும் செய்யாதிருப் பாரோ ?** அல்லேலூயா. கனமும், புகழும்,மகிமையும் தேவனுக்கே.

மோட்ச பிரயாண புத்தகத்தின் தலையங்கத்தில் எழுதிய தனது கடைசி வரிகளினால் தன்னுடைய மரணத்தை உறுதிப்படுத்தினார்கள்

என்னுடைய தகப்பனார் தேவபிள்ளைகளாகிய உங்களுக்கு முற்றும் இலவசமாக கொடுத்த **மோட்ச பிரயாணம்** என்னும் புத்தகத்தை தன்னுடைய விருத்தாப்பிய இறுதி நாட்களான 81 ஆம் வயதில் அதிகாலை முதல் நாளின் பிந்திய இரவு வரை அநேக நாட்கள் சரியாக எதையும் புசியாமல் காப்பி அல்லது டீ எதாவது ஒன்றை குடித்துக்கொண்டு 6 நாளும் தன்னம் தனியனாக இருந்து தன் சொந்த கைகளால் கம்பியூட்டரில் டைப் செய்வதைப் பார்க்கும்போது எங்கள் கண்களெல்லாம் கண்ணீரால் நிரம்பும். நிச்சயமாகவே இதை கேட்கும் தேவ பிள்ளைகளாகிய உங்கள் கண்களிலிருந்து கண்ணீர்

தாரை, தாரையாக தாராளமாக கன்னங்களின் வழியே ஒடும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இருக்காது. வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு பல ஆயிரம் மைல்கள் தனியாக நடந்த கால்கள், முதுமையின் காரணமாக எதையாவது பிடிக்காமல் நடப்பது என்பது சற்று சிரமமானது தான். அதே போலத்தான் பல ஆயிரம் கடிதங்களையும், 40 ஆண்டுகளுக்கு மேலாக தேவ எக்காளம் பத்திரிக்கையையும் எழுதிய கரங்கள் இப்பொழுது மிகவும் பெலவீனமாக இருந்ததால், கம்பியூட்டரில் உள்ள மௌசின் மீது தனது வலது கரத்தை வைத்து அது அசையாதபடிக்கு தனது இடது கரத்தை அதின் மீது அழுத்தமாக பிடித்துக்கொண்டு கர்சரை நகர்த்துவார்கள். இப்படியாகவே அந்த புத்தகம் முழுவதையும் டைப் செய்தார்கள். அப்புத்தகத்தை அச்சுக்கு கொடுக்கும் முன் அதின் பிரதியை அன்புக்கும், பாசத்துக்குமுரிய மார்ட்டின் தேவபிரசாத் மற்றும் அவர்களின் துணைவியார் சாஸ்திரியார் சாராள் மார்ட்டினும் ஜெபித்து பிரதிஷ்டை செய்யும் படத்தை காணலாம்.

தேவப்பிள்ளைகளாகிய உங்கள் பரிவும்,தயவும் எங்கள் மீதும் எங்கள் பிள்ளைகளின் மீதும் இருக்கவேண்டும் என்பதற்காக இவ்வரிகள் எழுதப்பட வில்லை. உங்கள் கரங்களில் உள்ள இப்புத்தகம் எவ்வாறு உருவானது என்பதனையும், விலையேறப்பெற்ற உங்கள் ஆத்துமாக்களை எவ்வித சேதமுமின்றி ஆண்வருடைய பாதத்தண்டையில் கொண்டு சேர்ப்பதற்காக அவர்கள் காண்பித்த தியாகத்தை அறிவிக்கவே இவ்வரிகள் எழுதப்பட்டுள்ளது. எல்லா கனமும், துதியும்,மகிமையும் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்குமே சதா காலங்களிலும் உண்டாவதாக . ஆமென்.

அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் அளவற்ற அன்பினால் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் **மோட்ச பிரயாணத்தை** அழகான புத்தகமாக்கி **தேவ எக்காளத்தை** நேசித்து வாசித்த அன்பு தேவ பிள்ளை களுக்கும், தவனமுள்ள அநேக ஆத்துமாக்களுக்கும், தேவ ஊழியர்களுக்கும், இரு புத்தகங்கள் வீதம் தூத்துக்குடி,திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உயர் நிலைப் பள்ளிகளுக்கும் முற்றும் இலவசமாகவே கொடுத்தார்கள்.

மோட்ச பிரயாணம் புத்தகத்தின் தலையங்கத்தில் **உம்மோடிருக்கவும், உம்மைப்போற்றவும் இதோ வருகின்றேன்** என்று கிறிஸ்தியானின் மனைவி கிறிஸ்தீனாள், மோட்ச பிரயாண யாத்திரையின் முடிவில் பாடிக்கொண்டே மோட்சவீட்டுக்கு பறந்து சென்ற காட்சிதான் என்று மிகவும் திட்டமும், தெளிவாகவும் சொல்வதற்கான காரணம் இதோ நானும் வெகுவிரைவாக உங்கள் அனைவருக்கும் இறுதி விடைகொடுத்து பின்னர் என் நேசரை நோக்கி **உம்மோடிருக்கவும்,உம்மைப்போற்றவும் இதோ வருகின்றேன்** என்று சொல்லும் காலம் வந்து விட்டது என்பதனை அவர்களின் உள் மனம் தெளிவாக உணர்த்திவிட்டது என்பதை நன்கு அறிந்து கொள்ளமுடிகின்றது.

மறுமைக்குள் மகிமையாக பிரவேசித்தல் !!

தன்னுடைய பதினெட்டாம் வயதில் தன்னை ஆட்கொண்ட சர்வ வல்லமையுடைய தேவனுக்கு முற்றிலுமாக கீழ்பட்டவர்களாக தன்னுடைய வாழ்க்கையை இயேசு பெருமானுக்கென்றே அர்ப்பணித்துக் கொண்டார்கள். இவ்வகண்ட பூமியிலே தன்னுடைய வாழ்நாள் காலத்தில் ஊழியம் என்ற பெயரிலோ அல்லது தனக்கென்றோ அல்லது அருமைப் பிள்ளைகளாகிய எங்களுக்கென்றோ ஒரு அடி நிலத்தைக் கூட வாங்காத உண்மையான ஊழியக்காரன் என்ற பெயருக்கு சொந்தக்காரர். பணியின் காரணமாக பிள்ளை களாகிய நாங்கள் விடுமுறை நாட்களில் மட்டும் அவர்களோடு சேர்ந்து கொள்வோம். எங்களை அதிகமாக நேசித்தார்கள். நித்தியத்தைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றும் **உங்களுடைய ஆத்துமாக்களுக்கு நீங்கள் தான் பொறுப்பு** என்று அவர்கள் அடிக்கடி சொல்லி எச்சரித்துக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் அதிகமாக நேசித்த பேரப்பிள்ளைகளை நீங்கள் காணலாம்.

வாழ்க்கையின் இறுதிவரை தன்னம் தனியனாக இருந்து ஓய்வின்றி எப்படியாவது சில ஆத்துமாக்களுக்கு இரக்கம் பாராட்டவும், ஏரிநரகத்தி லிருந்து தப்புவிக்க வேண்டுமே என்று பெருமூச்சோடு உழைத்தார்கள். இவ்வுலகை விட்டு நித்தியம் நித்தியமாக விடைபெற்ற நாள் அன்றும் ஒரு சில அன்பான தேவபிள்ளைகளுக்கு புத்தகங்களை கூரியரில் அனுப்பி வைத்து அவைகள் அவர்களுடைய கைகளில் கிடைக்கப்பெறும் முன்னரே **பிதாவே உம்மோடிருக்கவும், உம்மைப் போற்றவும் இதோ வருகிறேன்** என்று சொல்லி இவ்வுலகத்தை விட்டு பிரிந்து சென்றுவிட்டார்கள். 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதியன்று தன்னுடைய 83 வது வயதில் முழங்கால் ஊன்றி ஜெபித்த நிலையிலே மகிமையான பிதாவின் இராஜ்யத்திற்குள் பிரவேசித்துவிட்டார்கள். இந்த பூமியிலே அவர்களது மட்டற்ற ஆசைகளில் ஒன்று தான் **ஜெபித்துக்கொண்டிருக்கும் போதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடம் சென்று விடவேண்டும்** என்பதே. அதை அநேக தேவபிள்ளைகளிடமும் சொல்லி இருக்கின்றார்கள். நீதிமான் விரும்புவது அவனுக்கு கிடைக்கும் என்ற வேதவாக்கியத்துக்கிணங்க தேவனும் அவர்களின் வாஞ்சையை அப்படியே நிறைவேற்றினார். அவர்கள் மரிக்கும் போது யாரும் அவர்களின் அருகில் இல்லை. வீட்டில் இரண்டு இடங்களில் மட்டும் தான் பல மணி நேரம் ஆண்டவருடைய பாதத்தில் முழங்கால் ஊன்றி ஜெபித்துக்கொண்டிருப்பார்கள். அலுவலகமும்,படுக்கை அறையும் அவர்களுக்கு ஒன்றே. அங்கு ஜெபிப்பதற்கு வசதியாக தரையில் விரிப்பான்கள் விரிக்கப்பட்டிருக்கும். அங்கேயே ஜெபித்துக்கொண்டிருந்த நிலையிலேயே மரித்துவிட்டார்கள். அந்த இடத்தை நீங்கள் படத்தில் காணலாம்.

சூரிய உதயத்திற்கு பின்பும், மத்தியான மற்றும் சாயங்கால வேளைகளில் படுக்கை அறைக்கு முன் இருக்கும் வராந்தாவில் இயற்கை காட்சிகளைப் பார்த்தபடி ஜெபித்துக்கொண்டிருப்பார்கள். அந்த இடத்தையும் தேவபிள்ளைகளாகிய நீங்கள் காணலாம்.

வாழ்க்கையின் சூரியன் அஸ்தமித்து நித்தியத்தின் அமைதியான அதிகாலை வேளை உதயமாயிற்று. என் தகப்பனாருடைய மரணத்தை

கேள்விப்பட்டு அநேக தேவனுடைய பிள்ளைகளின் உள்ளத்தை சுக்கு நூறாக உடைத்தது. ஐயோ எங்களுக்காக இரவும் பகலும் உண்மையாக ஜெபித்த, ஆலோசனைகள் கொடுத்த, உதவிகள் பல செய்த ஆவிக்குரிய அன்பு தகப்பனாரை, சகோதரனை இழந்து விட்டோமே என்பது தான் அவர்களின் புலம்பல். 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று மாலை 5 மணிக்கு உயிரற்ற குளிர்ந்துபோன உடலை கோத்தகிரி பட்டணத்தில் உள்ள சி.எஸ் ஐ. வெஸ்லி ஆலயத்தில் அனைத்து சபை மக்கள், தேவபிள்ளைகள் முன்னிலையில் அடக்க ஆராதனை நடத்தி அன்பு போதகர்களால் அழகிய மலை பள்ளத் தாக்கில் ஆலய வளாகத்தில் உள்ள கல்லறை தோட்டத்தில் அவர்களது அன்பு மனைவிக்கு அருகில் உயிர்த்தெழுதலுக்காக நல்லடக்கம் செய்யப் பட்டார்கள்.

கடைசி எக்காளம் தொனிக்கும் போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். உங்கள் இருதயம் துக்கப்பட வேண்டாம். தேவனுடைய பிள்ளைகளுக்கு மரணம் என்பது மகிமையான மறுமை வாழ்வுக்கு ஒரு திறவுகோல் மாத்திரமே. **மரணமே உன் கூர் எங்கே ? பாதாளமே உன் ஜெயம் எங்கே ? உயிர்த்தெழுந்த ஆட்டுக்குட்டியானவருக்கே கனமும், மகிமையும் புகழும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்**

S.CHARLES FINNEY

S.SUNDER SINGH
KOTAGIRI 643 217
NILGIRIS. TAMILNADU
Web : devaekkalam.com E.Mail : nsamuel 236@ gmail.com
Phone No : 9443461792 , 04266 271527